# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்.SA 116/SCIC/2024**

திரு.பரமசிவம் த/பெ.வேணுகோபால் - மேல்முறையீட்டாளர்
எண்.91/4, 2-வது தெரு, காமராஜர் நகர்
மேலமையூர் ஊராட்சி
செங்கல்பட்டு- 603 001.
கைபேசி- 9952228541.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம்-603 406.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **10.07.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.10.2023 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 02.01.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 12.09.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 10/07/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் வட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "காஞ்சிபுரம் வட்டம், உத்திரமேரூர் வட்டம் நெ.67, ஆலஞ்சேரி கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு அரசு வழங்கிய பஞ்சமி நிலங்கள் உள்ளதா என்ற விவரமும் உள்ளது எனில் அவைகளின் சர்வே எண்கள், பரப்பளவு, அவைகளின் சர்வே எண்கள், பரப்பளவு, அவைகள் யார், யார்க்கு அரசு வழங்கியது போன்ற தகவல்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.V.பரமசிவம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.ராணி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 12/09/2025 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகவும், அதில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆலஞ்சேரி கிராமத்தில் பஞ்சமி நிலங்கள் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 10/07/2023 தேதியிட்ட மனுவிற்கு, உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல்களை அனுப்பாமல் மிகவும் கால தாமதத்துடன் அதாவது 12/09/2025 தேதியிட்டு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனை ஆணையம் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறது. இனி வருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ஐ முறையாக உரிய காலவரையறைக்குள் மனுதாரருக்கு தகவல்களை அளிக்க வேண்டும். அவ்வாறு தகவல்களை அளிக்காத பட்சம், சட்டப்படியான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும், ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 116/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
உத்திரமேரூர் வட்டம்,
காஞ்சிபுரம்-603 406.

**மேல்முறையீட்டாளர்**

திரு.பரமசிவம் த/பெ.வேணுகோபால்
எண்.91/4, 2-வது தெரு, காமராஜர் நகர்
மேலமையூர் ஊராட்சி
செங்கல்பட்டு- 603 001.
கைபேசி- 9952228541.

RG/Sr.PC